





We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)

## மே - 2019

*We Are Here..!! To Guide You..!!*







# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## மே - 15.05.2019

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- முக்கிய தினங்கள்
- வர்த்தக நிகழ்வுகள்











## தமிழக நிகழ்வுகள்

- **புதுச்சேரியில் இருந்து மாமல்லபுரம் வரை 82கி.மீ தூரத்தை 3 மணி நேரத்தில் சைக்கிளில் கடந்து 7 வயது மாணவர் அபிநவ் சாதனை புரிந்தார்.**

- மாற்று சான்றிதழ்களில் சாதியை குறிப்பிடக்கூடாது என்று பள்ளிக் கல்வித் துறை உத்தரவு பிறப்பித்துள்ளது
    - தமிழக பள்ளிக் கல்வி துறையின் "எமிஸ்" இணையதளம் மூலம் இனி வழங்கப்படும் மாற்று சான்றிதழ்களில் சாதியின் பெயர் குறிப்பிடபடாது என பள்ளி கல்வித்துறை தெரிவித்துள்ளது.

- மத்திய அரசின் மருத்துவ காப்பீட்டு திட்டமான "ஆயுஷ்மான் பாரத்" திட்டத்தை செயல்படுத்த தமிழக அரசிற்கு ரூ.293 கோடியை மத்திய அரசு ஒதுக்கியுள்ளது.
    - நாடு முழுவதும் 50 கோடி பேருக்கு மருத்துவ காப்பீடு அளிக்கும் திட்டம் "ஆயுஷ்மான் பாரத்" ஆகும்.

## இந்திய நிகழ்வுகள்

- **எதிரி நாட்டு விமானங்கள் உள்ளிட்ட வான் இலக்குகளை துல்லியமாகத் தாங்கி அழிக்கும் அப்யாஸ் (ABHYAS) ஆளில்லா விமானத்தை பாதுகாப்பு துறை ஆராய்ச்சி மேம்பாட்டு அமைப்பு (DRDO) வெற்றிகரமாக சோதித்தது**
    - பாலஷோர் பகுதியில் உள்ள ஒருங்கிணைந்த சோதனை வரம்பு பகுதியில் இந்த சோதனை நடத்தப்பட்டது
    - தற்போதைய DRDO தலைவர் G. சத்தீஸ் ரெட்டி முன்னிலையில் சோதனை நிகழ்த்தப்பட்டது

- **தூர்தர்ஷன் அமேசான் இந்தியாவுடன் இணைந்து இணையத்தில் "சோவினிர்" என்ற இணையதள வர்த்தகத்தை துவக்கியுள்ளது**
    - இந்த இணைய சேவையை தொடங்கிய முதல் இந்திய ஒளிபரப்பு குழுமம் தூர்தர்ஷன் ஆகும்

- ○ பிரசார் பாரதி அமைப்பின் தலைவர் “சூர்ய பிரகாஷ்” இதனை தொடக்கி வைத்தார்

- ஐ.நா பொது சபையின் அடுத்த தலைவராக ஐ.நா-வுக்கான நைஜீரியத் தூதர் திஜானி முகமது பாண்டே தேர்ந்தெடுக்க இந்தியா தனது ஆதரவை தெரிவித்துள்ளது என ஐ.நா-வுக்கான இந்திய சையது அக்பருதீன் தெரிவித்தார்
  - ○ 74-வது ஐ.நா பொதுசபை கூட்டத்துக்கு, திஜானி முகமது பாண்டேவை தலைவராக நியமிக்க இந்தியா முயற்சி

## உலக நிகழ்வுகள்

- **ஈரான் வெளியுறவு அமைச்சர் ஜாவத் ஷ்ரீப் இருநாள் பயணமாக இந்தியா வந்துள்ளார்**
  - ○ இந்திய வெளியுறவு துறை அமைச்சர் சுஸ்மா சுவராஜை சந்தித்து இரு நாட்டு உறவு தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த திட்டமிட்டுள்ளார்

## விளையாட்டு நிகழ்வுகள்

- **சர்வதேச கிரிக்கெட் போட்டி நடுவர்கள் குழுவில் முதல் முறையாக இந்தியாவை சேர்ந்த G.S லக்ஷ்மியை ஐ.சி.சி நியமித்துள்ளது.**
  - ○ சர்வதேச போட்டித் தொடர்களில் இந்த நடுவர் குழுவில் இடம் பெற்றிருக்கும் நடுவர்களே பணியாற்றுவர்
  - ○ ஆண்கள் மட்டுமே இடம் பெற்றிருந்த ஐ.சி.சி நடுவர் குழுவில் பெண் நடுவரான G.S. லக்ஷ்மியும் இணைந்திருப்பதன் மூலம் இனி பெண் நடுவர்களும் பணிபுரிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது

- மாட்ரிட் ஓபன் டென்னிஸ் போட்டி ஆடவர் ஒற்றையர் பிரிவில் ஜோகோவிச் சாம்பியன் பட்டம் வென்றார்
  - ○ செர்பியாவின் ஜோகோவிச் 3-வது முறையாக மாட்ரிட் ஓபனில் சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்
  - ○ தற்போது உலக டென்னிஸ் தரவரிசையிலும் முதல் இடத்தில் உள்ளார்

## முக்கிய தினங்கள்

- **உலக குடும்ப தினம் மே 15**
  - குடும்பத்தை சமத்துவத்தோடு நடத்துவது குடும்ப வன்முறையை தடுத்தல் போன்ற விழிப்புணர்வுகளை குடும்பங்களில் ஏற்படுத்த ஆண்டு தோறும் மே-15 சர்வதேச குடும்ப தினம் கொண்டாடப்படுகிறது

- **"இந்திய நீர்ப் பாசனத்தின் தந்தை" என அறியப்படும் சர் ஆர்தர் காட்டன் பிறந்த தினம் மே 15**

## வர்த்தக நிகழ்வுகள்

- பொருளாதாரக் கணக்கெடுப்புக்கு செல்லிடப்பேசி செயலிகளைப் பயன்படுத்த மத்திய புள்ளியில் துறை அமைச்சகம் திட்டம்
  - **நாட்டின் 7-வது பொருளாதார கணக்கெடுப்பு ஜீன்1 அன்று தொடங்குகிறது**

We Shine Academy™